அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 2/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு- 07.
20, ஜனவரி, 1988.

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 11 ஐயும் வகுப்பு 11 தரம் 1 ஐயும் ஒன்று சேர்த்தல்

இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 11 ம் வகுப்பு 11 தரம் 1ம் 1987.10.20 ஆம் தேதி முதல் ஒன்று சேர்க்கப்படும், இலங்கை விஞ்ஞான சேவையினது மேன்மிகை ஆளணியின் வகுப்பு 11 தரம் 1 க்கான பதவி உயர்வு அத்தேதியிலிருந்து இல்லாதொழியும்.

02. 1987.10.20 இல் உள்ளவாறு அல்லது அதன்பின் இலங்கை விஞ்ஞான சேவையில் பத்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளவரான இலங்கை விஞ்ஞான சேவை சார் வகுப்பு 11 தரம் 11 இல் பதவி உறுதி செய்யப்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யுமிடத்து 1987.10.20 ஆம் திகதியிலிருந்து அல்லது பதவி உயர்வு பெறுவதற்கு அவர்தகுதி பெறும் நாளிலிருந்து இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 1 க்குப் பதவி உயர்த்தப் படுவார்.

(அ) உரிய தேதியில் 1ஆம் 2ஆம் தகுதிகாண் தடைப் பரீட்சைகளல் சித்தி எய்தியிருத்தல் வேண்டும்.

(ஆ) பூரண தொழில்சார் தரகமைகள் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது, விஞ்ஞான ஆராய்ச்சியின் ஏற்புடைய துறையில் விதிக்கப்பெற்ற நெறியில் பயிற்சியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) பதவி உயர்வு பெறுதற்கு தகுதியாவதற்கு முற்பட்ட 5 வருடகாலத்தில் உரிய திகதிகளில் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) பதவி உயர்வு பெறுதற்கு தகுதியாவதற்கு முற்பட்ட 5 வருட காலப் பகுதியில் புரிந்த ஏதாவது தவறு நிமித்தம் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆட்படாதிருத்தல் வேண்டும்.

03. மேலுள்ள பந்தி 2 இல் குறித்த தேவைகளைப் பூர்த்தி செய்ப வராயுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்த இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 1 க்குப் பதவி உயர்வுப் பொருட்டு, தம்பால் கிடைக் கப்பெற்ற விண்ணப்பங்களை, திணைக்களத் தலைவர்கள், தமது சிபாரிசு களுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுச் செயலாளரினூடாக எனக்கு அனுப்பி வைக்குமாறு விநயமுடன் வேண்டப்படுகின்றனர்.

04. வகுப்பு 11 தரம் 1க்கான பதவியுர்வுசார் விண்ணப்பம், இத்துடன் இணைக்கப்பெறும் படிவத்தின் வண்ணம் அமைதல் வேண்டும்.

ஒப்பம்: டி.பி.ஐ.பீ.எஸ்.சிறிவர்தன.

செயலாளர்,

அரசாங்க நிருவாக அமைச்சு.

தவிசாளர்,

இலங்கை விஞ்ஞான சேவைச்சபை.

படிவம் " அ " அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல 2/88 இன் 3ஆம் பந்தி, (நியதிகளின்படி) இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 11ம் வகுப்பு 11 தரம் 1ம், ஒன்று சேர்க்கப்பட்டதன் நிமித்தம் இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 1 க்கான பதவியுயர்வுப் பொருட்டான விண்ணப்பம்.

## பாகம் - 1

( விண்ணப்பகாரர் பூர்த்தி செய்தற்குரியது )

1. முழுப் பெயர் :-
2. பதவிப் பெயர் :-
3. அமைச்சு / திணைக்களம் :-
4. இ.வி.சேவையின் வகுப்பு 11 தரம் 11க்கு நியமனம் பெற்ற திகதி :-
5. பிறந்த திகதி :-
6. பின்வரும் பரீட்சைகளில் சித்தியெய்தியுள்ளீரா ? இருப்பின் விபரங்களைத் தருக.

| பரீட்சைப் பெயர் | சித்தி எய்திய திகதி |
|---|---|
| (அ) 1 ஆவது தகுதிகாண் பரீட்சை. | |
| (ஆ) 2 ஆவது தகுதிகாண் பரீட்சை. | |

7. தொழில்தகைமை அல்லது ஏற்புடைய துறையில் பயிற்சிபெற்றுள்ள விதித்த பயிற்சிநெறி, அல்லது இரண்டும் பற்றிய விபரங்கள், திகதிகளுடன் தருக.
8. பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? எனின் விபரம் தருக.
9. இப்போதைய வருடாந்த வேதனம் :-
10. கடைசி 5 வேதன ஏற்றங்கள் பெற்றுள்ளீரா ?
11. பதவி உயர்வுக்குத் தகுதி பெறுமுன்னரியன்ற 5 ஆண்டு காலப்பகுதியில் ஏதாவது ஒழுக்காற்றுத்தண்டனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறீரா ?
12. வகுப்பு 11 தரம் 1 க்கான பதவி உயர்வு எத்தேதியிலிருந்து கோரப்படுகின்றது ?
13. இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 1க்கான பதவி உயர்வினைப் பெறுதற்கு மேற்போந்த 12 ஆவது பந்தியில் குறித்த திகதியிலிருந்து தகுதி பெற்றுள்ளேன் எனவும், 1 முதல் 12 வரையான பந்திகளில் கொடுக்கப் பெற்றுள்ள தகவல்கள் எனது நம்பிக்கைக்கும் அறிவுக்கும் எட்டியவரை உண்மையானவை எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பகாரரின் ஒப்பம்.

திகதி :-

## பாகம் - 11

( திணைக்களத் தலைவரின் சான்றிதழ் )

திரு/திருமதி/செல்வி ...................... .......... அவர்கள், இப்படிவத்தில் சமர்ப்பித்த விபரங்களைச் செவ்வைபார்த்து அவை சரியானவை எனக் கண்டேன். கடந்த ஆண்டுகளில் அவர் ஆற்றிய சேவை திருப்திகரமானது.
2/88 இல்.
1988.01.20ஆம் திகதியிட்ட/அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின்படி, அவர் இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 1க்கு பதவி உயர்வு பெறத் தகுதியுடையவராவார்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடிதத்தில் காட்டிய காரணங்களின் நிமித்தம் விண்ணப்பத்தினைச் சிபார்சு செய்யவியலாது.

( பொருத்தமற்றதை நீக்கிவிடுக )

..............................

திணைக்களத் தலைவரின் ஒப்பம்.

திகதி :- பதவிப் பெயர்.

## பாகம் - 111

திரு/திருமதி/செல்வி .......................... அவர்கள், இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 1க்குப் பதவியுயர்வு பெறத் தகுதியுடையவராவார்.

பதவி உயர்வை நான் சிபார்சு செய்கிறேன்.

ஒப்பம் :

செயலாளர்,

அமைச்சு